83159
2340

உ

குகமயம்



# வள்ளியம்மை திருமண ஞான நெறி விளக்கம்

வித்துவான்: பொன் - கந்தசாமி

மாதகல்
இந்துசமய அபிவிருத்திச் சங்க வெளியீடு எண். 20


உ
294.5
கந்த

உ

குகமயம்

25-09-19
பகுதி
யாழ்ப்ப

L340C



87159

# வள்ளியம்மை திருமண ஞான நெறி விளக்கம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

வித்துவான்
பொன். கந்தசாமி

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்கம்
1990 வைகாசி மீ வெளியீடு எண் 20

உ

குருமயம்

# முன்னுரை

"வள்ளியம்மை திருமணத் தத்துவம்" என்பது ஆன்மா மலநீக்கம் பெற்று திருவருளினால் இறைவன் திருவடிக்கீழ்ப் பேரின்பம் பெற்றுய்தலாம் என்க. பதி, பசு, பாசம் என்பன முப்பொருள் உண்மைகள் 'பதி - இறைவன்; பசு - ஆன்மா; பாசம் - மலம்.

உலகம் இறைவனிடத்தில் தோன்றி ஒடுங்கி மீளவும் வந்து தோன்றுகின்றது. அது உயிரும், உயிரில் பொருளுமாகி யிருக்கின்றது. உயிருக்குத் தோற்றமும் அழிவும் இல்லை. இறைவன் என்றுமுண்டோ அன்று உயிரும் உண்டு. இறைவன் ஒன்று. உயிர்கள் அநந்தம். செம்பிற் களிம்புபோல உயிருடன் மலம் உடனிருக்கின்றது. மலநீக்கம் பெற்றதும் உயிர் சிவஞான ஒளிபெற்று பேரின்பமனுபவிக்கின்றது.

மாயை நுண்பொருள் உயிரின் பொருட்டு தனுகரண புவனம் ஆகியவைகளைத் தோற்றுவித்து அருட்சக்தியில் ஒடுங்குகின்றது. அருட்சக்தி சிவத்தில் ஒடுங்கும். ஒடுங்கிய முறையே உலகம் மாயையிலிருந்து தோன்றுகின்றது.

உடம்பில் உயிர் மலநீக்கம் பெற உலகவாழ்வைத் தொடங்குகின்றது. உயிர் நினைத்தாலும் சொன்னாலும், செய்தாலும் வினை எனப்படும். வினைமாயையில் ஒடுங்கிய வழி, அதனுடன் பொருந்தித் தோற்றும் போது தனு கரணங்களுக்கு ஏதுவாகின்றது. வினை நீக்கம் பெற பிறப்பு உண்டாகிறது. வினையும் உயிர்போல அறிவற்றது. உலகுக்கு முதல்வன் இறைவன், முதற்காரணம் மாயை, துணைக்காரணம் — 'அருட்சக்தி எனப்படும். உடல் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் ஆகிய அற் கருவிகளால் உலகியலறிய அறிய

முடிகின்றது. மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய அந்தக் காரணங்கள் கருவிகளை இயக்குகின்றது. உட்கருவிகள் அரு உடம்பு எனப்படும். இவைகளைப் பொருந்திய ஆன்மதத்துவம் அறிவு, இச்சை செயல்களை வெளிப்படுத்துகின்றது.

மலத்தினால் மறைப்புண்ட ஆன்மா அறிவுபெறச் சிவதத்துவம் உதவுகின்றது, உயிரை இயக்குவது திருவருள். திருவருள் கருவிகளோடுகூடி, அதுவேதானென மயங்கும் ஆன்மாவை உண்மை அறிவு பெறச் செய்கின்றது. உருவும் அருவும் ஆகிய உலகியற் பொருள் அசத்து இறைவன் அறிவால் அறியப் படுபொருள். அது சத்து. உயிரும் முதல்வனும் அனாதி உயிர் சத்து இறைவனைத் திருவருள் அறிவு கொண்டுதான் அறியமுடியும்.

87159

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பதுமது. திருவருளறிவு — சிவஞானம் என்று கூறுவர். சத்தாகிய சிவத்தின் முன் அசத்தாகிய உலகம் மறைந்து ஒழியும், அசத்து சத்தை அறிய முடியாது. அசத்தாகிய உலகியற்பொருள் உயிரற்றன. எதையும் அறியமுடியாது. எனவே இறைவன் உலகு என்பவற்றிற்கு வேறானது உயிர். அவ்விரண்டையும் அறியும் அறிவு ஆன்மாவுக்கு உண்டு. ஆன்மா அசத்தாகிய உடலுடன் கூடி உலகியலை நடத்துகின்றது.

ஆன்மா ஐம்புலன் நுகர்ச்சியினால் இன்பமுற்று அதன் செயலில் வயப்படுகின்றது. ஆன்மா, உடல் உலகு கருவிகளுடன் சேர்ந்து பயனையடையவேண்டும். அந்த அறிவை ஆன்மாவுக்கு இறைவன் உடனாய் நின்று உணர்த்துகின்றான். அதனால் ஆன்மா மல நீக்கம் பெறுகிறதும் பக்குவ ஆன்மாவுக்கு இறைவன் குருவடிவுடன் (மனித) வந்து சிவஞானத்தை உணர்த்துகின்றான். ஆன்மா சிவத்தைச் சேர்ந்து ஒன்றுகின்றபோது ஒன்றி உடனாய் (அத்துவிதம்) நிற்கும் இது சிவானந்த ஞானவடிவு எனப்படும்.

பாச ஞானம் பசு ஞானம் — அசத்து: இவை சத்தாகிய (உண்மை) சிவத்தை யறியாது. சிவஞானம்தான் அறியமுடியும். மணிவாசகரும் சிவஞானம் பெற்று இரண்டறக் கலந்தவர். சிவஞானம் திருவடிக்கீழ்ச் சேர்ப்பிக்கும். அத்திருவடிக் காட்சியால் பேரின்பமுண்டாகும். ஒன்றாயும் உடனாயும் உள்ள இறைவனை 'ஐந்தெழுத்து' ஓதி ஆன்மா, உணருகிறது. அதனால் பிறப்புவந்து சேரமாட்டாது.

நான் எனது என்ற உயிர் நினைவு செயல் அற்றுவிட இறைவனிடத்தில் அன்பு செலுத்தவேண்டும். "நமசிவாய" என்னும் மந்திரம் — அதன் உண்மைப் பொருள் ஆன்மா மலநீக்கம்பெற சிவசக்தியுடன் ஒன்றியிருப்பது என்பது என்க.

உ

குகமயம்

# அணிந்துரை

மாதகல் பதி நுணசையம்பதி முருகமூர்த்திபால் மெய்யன்பு பூண்டு பணிபூண்ட மெய்யடியவர் வித்துவான்-பொன் சுந்தரசாமி ஆசிரியர் அவர்கள் "வள்ளியம்மை திருமண ஞான நெறி விளக்கம்" என்ற பெயரில் ஓர் ஆராய்ச்சி நூலை வெளியிட உறுதிபூண்டார். ஆண்டாண்டு தோறும் அம் முருகன் ஆலயத்துக் கந்த புராண படனம் செய்துவந்த புண்ணியத்தாலும் முருகப் பெருமானிடத்து வைத்த உழுவலன்பு காரணமாகவும், மெய்ஞ்ஞானிகள் பலரது அறிவுரைகளையும் நல்லாசிகளையும் பெற்று அதனால் விகசித்த தன் மெய்யுணர்வில் தோன்றிய ஞானச் செழும் பொருளை நூல்வடிவிலாக்கி அம் முருகப் பெருமான் திருவடி மலர்களில்சூட்டி, உலோகோபகாரமாக வெளியிட வேண்டுமென்ற அப்பெரியார் வேணவா இந்நூலில் வெளியிடுவதன் மூலம் சித்தி பெற்றுள்ளது.

"பல்லூழி ஜென்மம் பரமனை நினைந்து அர்ச்சித்தன்றி
நல்லுணர்வு சுற்று நகும்" என்ற முதுமொழிக்கு

இலக்கியமாகக் காஞ்சி குமரகோட்டத்து அர்ச்சகர்களிலொருவராகி அல்லும் பகலும் அங்கு வதியும் முருகப் பெருமான் அநுபூதி பெற்ற உயர் கச்சியப்ப சிவாசாரியார் உபாசனை ஒரு கந்த புராணம் தோன்றுதற்கு மூலமாயினாற் போல, சைவ சித்தாந்தக் கருவூலமாக அமைந்த கந்த புராண வள்ளியம்மை திருமணப் படலத்துள் பொதிந்து கிடந்த மெய்ஞ்ஞான கருவூலமான மூலபண்டாரத்தை மெய்யன்பர்கள் படித்தறிந்து அநுபூதி கூடவேண்டுமென்ற வேட்கையினாலே தனது சிரமம் எதுவும் குறிக்கொள்ளாது, ஞானசாரிய நெறி நின்று நூலாக்கி வெளியிடுகின்றார். இச் செயலும் அவரது இச்சையும் மெய்யறிவும் அறிவறிந்த

ஆன்றோர்களால் நன்கு மதிக்கப்படுவது மட்டுமன்றி, வாழையடி வாழையாக வாழவிருக்கும் சைவாபிமானிகளுக்கும் ஞானவிருந்தாகும் என்பது இதனை வாசித்துணர்ந்த போது புலனாயிற்று. ஆகவே உருவிற் சிறியதாயினும் பொருளிற் பெரிதாக அமைந்த இந்நூல் வெளியிடப் பெறுவது சிவ நல்வினை மட்டுமல்ல, ஞானக் கொடையாகிய தலையாய கொடையுமாகும்.

சைவ உலகம் இந்நூலை உவந்து வரவேற்கும் என்பது எனது பூரண நம்பிக்கை. அதுமட்டுமல்ல. உலகு இன்பங்களில் மயங்கி மெய்ஞ்ஞான நெறிக்குச் சிந்தையை நெறிப்படுத்தாதவர்களுக்கும், கந்த புராண கலாச்சாரத்தை நன்கு உணர்ந்து,
புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி - மேலாம் நன்னெறி ஒழுகச் செய்விக்கும் திறவு கோலாகவும் இந்நூல் என்னென்றும் நின்று நூற்பயன் தரும் என்பதும் எனது பூரண நம்பிக்கை,

சைவ சித்தாந்த சங்கிரகமாகவும் அறிஞர்க்கு ஞான பாதம் தெரிக்கும் பனுவலாகவும் இந் நூல் நின்று நிலவு முருகப்பெருமான் திருவருள் துணை நிற்பதாகுக. இந் நூலவசிரியர்க்கும் சர்வாபீஷ்ட வரதராகிய முருகப்பெருமான் நீண்ட ஆயுளையும் இன்பமான வாழ்வையும் நல்குக என இதனால் ஆசிர்வதிக்கின்றேன்.

தேவஸ்தானம் இங்ஙனம்
இணுவில் கந்தசுவாமி கோவில் வித்துவான் இ- திருநாவுக்கரசு
17-11-89. செயலாளர்.

உ
சிவமயம்

# நன்றியுரை

"புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி நன்னெறி" செலுத்துவது கந்தபுராணம். இப்புராணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலுமில்லை. கந்தபுராண முதல் நூலில் தேவகாண்டத்தின் இறுதியிற்றான் வள்ளி திருமணப்படலம் கூறப்பட்டுள்ளது. வள்ளி திருமணமாவது பக்குவான்மாவைப் பதி குரு வடிவுடன் வந்து ஆட்கொள்ளும் திறன் கூறப்படுகின்றது. பசு பாச நீக்கம் பெற்று பதியுடன் ஒன்றுபடுதலே இப்படலத்தின் தத்துவம். இதுதான் கந்த புராணமுழு வரலாறுமாகும்.

இந்நூல் யாவரும் படிக்கும் வகையில் இலகுவான வசனநடையில் எழுதப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த சாத்திரம் படிக்காதவர்களும் எளிதில் படித்து விளங்கிக்கொள்ளும் முறையில் அமைந்துள்ளது.

கையெழுத்துப் பிரதியை மேற்பார்வை செய்ய பல்வேறு குறிப்புரை எழுதி அணிந்துரை வழங்கிய பண்டிதர் வித்துவான். திரு. இ. திருநாவுக்கரசு அவர்களுக்கு உள்ளன்பு நிறைந்த நன்றியை மனமுவந்து தெரிவிக்கின்றேன்.

இந்நூலை ஒப்பு நோக்கி அழகிய முறையில் அச்சிட்டுதவிய சுவர்ண அச்சக உரிமையாளர் தம்பி ஜெகன் அவர்களுக்கும், அவர்தம் ஊழியர்களுக்கும் அன்புநிறைந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

பொன். கந்தசாமி.

குருமயம்

# வள்ளியம்மை திருமண ஞான நெறி விளக்கம்

வெள்ளியங் கிரியினேர் சார் விளங்கிய சந்தவெற்பில்
நன்னூறு நகரந்தன்னில் நங்கை கோ டினிது மேவும்
அள்ளிலே வேற்கை நம்பி யம்புலியெயினர் போற்றும்
வள்ளியை வதுவை செய்த மரபினை வழாது சொல்வாம்

(வள்ளி திருமணம் — செ. 1

வள்ளியம்மை திருமணம் "அறிவனூற் பொருளும் (ஞான நெறி) உலகியல் வழக்குமென்ற இரு பொருள் நுதலி எடுத்துக்கொண்ட ஞான காண்டமாகும்". (1) அவற்றுள் உலகியல் வழக்கு இறைவன் சிருட்டித் தொழிலினுல் உலக வடிவான தத்துவங்கள் போக நுகர்ச்சிக் கண் எல்லா உயிர்களுக்கும் பொதுவாய்ப் போகம்பயக்கு மாற்றை உணர்த்துதல் எனப்படும். மற்றைய அறிவனூற் பொருள் ஆன்மா ஞானத்தினுல் மேலான வீடு பேற்றை அடையுமாறு உணர்த்துதல் எனப்படும்.

உலகியலில் — ஈண்டு செய்த நல்வினைப் பயத்தால் ஒரு தலைமகன் ஒரு தலைமகளைப் புணர விரும்பி பாங்கனுல் தலைவியிருக்குமிடத்தை அறிந்து, தோழியைத் தன்வசப்படுத்தி, அத்தலைவியுடன் புணரும் முறையைப் போக காமிகளுக்கு இறைவன் நடித்துக் காட்டுதல் என்க. அது பாங்கனுக்கும் தலைவனுக்கும், தலைவனுக்கும், தலைவிக்கும், தலைவிக்கும், தோழிக்கும், தலைவனுக்கும் தோழிக்

கும் நற்றாய் முதலிய சுற்றத்தோர்க்கும் சமயோசிதமாக இடையிடையே உண்டாகின்ற நிகழ்ச்சிகளை இன்னது இன்னது என்று வெளிப்படச் சீவான்மாக்களுக்கு எடுத்துக் காட்டும் அகவொழுக்கலிலே என்க. முருகன் நாயகன், வள்ளி — நாயகி. நம்பிராசன் வேடுவர் சுற்றம் தாய் செவிலி தோழி கதா பாத்திரங்கள்; வள்ளிமலையும் யாமப்பொழுதும் முதல்; தினைப்புலம். கிளி யானை அருவி வேங்கை கரு வள்ளி கந்தனையடைந்த களவொழுக்கம் உரி, எனப்படும்.

"சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டுபவர்" என்பதில் சிற்றின்பம் உலக போகம் மற்றின்பம் என்பது வீடு பேற்றும் பேரின்பமாகும். "யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல அருளும் அன்பும் அறனுமாகும்" என்பதனாலும் தெளிவுபெறும். ஞானநெறியில் நோக்கினால் — ஞானத்தினால் மோட்சம் அடையு மாற்றை யுணர்த்துதல் அதாவது இறைவன் இருவினைக் கேற்ப ஆன்மாக்களுக்கு இன்பதுன்பங்களை நுகரச் செய்வித்து, ஆணவமல வலியினை மெலிவுறக் குறைவித்து மலபரிபாகத்தை வருவிக்க இரு வினை ஒப்பு திருவருளால் வாய்த்ததும் திருவருள் வீழ்ச்சி எனப்படும் சத்திநிபாதமுண்டாகும், இருவினை ஒப்பு மலபரிபாகம் பெற்ற சீவான்மாக்களுக்கு இறைவன் குருவடிவுடன் எழுந்தருளி மானைக் காட்டி மான்பிடிப்பது போல முன்னாக வந்து தரிசனங் கொடுத்து. மலங்களை எழுவகைத் தீட்சைகளி



னாற் றீர்த்து மெய்யுணர்வை உண்டாக்கி அருள் வடிவு பெற்றதும் திருவடிக்கீழ்ச் சேர்த்து பேரின்பம் அனுபவிக்கச் செய்வது, முருகன்-பதி, வள்ளி -பசு, நம்பிராசன் வேடுவர் சுற்றம் செவிலி நற்றாய் நாய்யானை வனவிலங்குகள் - பாசம், முருகன் வள்ளியைத் தேடி புனம் சென்றது - மார்ச்சார சம்பந்தம் (அதாவது பூனை தன் குட்டியை நேசித்தது போல்) தோழி இரவுக் குறியில் உடன் போக்குச் செய்தது பக்குவ ஆன்மா திருவருள் துணை கொண்டு சிவம் ஆகிய பதியை அடைவது - வள்ளி முருகனை அணைந்தமை சிவன்கள் சிவத்தோடு அத்துவிதமாக அணைந்து பிறிவறியாத இன்பம் நுகர்கின்ற பேரா இயற்கை அதுவே வீடு பேற்றின்பம். இவ்விரு தத்துவங்களும் வள்ளியம்மை திருமணத்தினால் உலகுயிர்கள் ஈடேறத் தந்த ஞானகாண்டம்.

"ஞானத்தால் வீடு என்று நான்மறைகள் நல்லாகமங்கள்
செப்பும் என்பதாலு முணர்க.

## வள்ளியம்மை அவதாரம்:-

துளங் கேரி வளர்த்து மூழ்கிச் சுந்தரி வடிவிநீக்கி
விளங்கு சூக்கும் மூதகத்தின் மேதகு தொண்டை நாட்டில்
வளங் கொள்மேற் பாடிமாட்டு வளர்வரைச் சாரலன்மி
உளங் கொளுமன்பு பொங்க வுயர்ந்தவ மாற்றா நின்றாள்.

(தணிகைப் புராணம் களவுப் படலம்-4)

சுந்தரவல்லி சூக்கும தேகத்துடன் மேற்பாடி நாட்டில் உள்ளமலையில் உயர் தவத்தைச் செய்து வந்தாள் என்க. [வள்ளி

நூலக சேவை

தவத்தைச் செய்து கொண்டிருந்த சிவமுனிவர் ஓர் பெண்மானைக் கண்ணுற்று காதலித்துக் காட்சிப் புணர்ச்சியால் கலவி யின்பினை நுகர அம்மான் வயிற்றிலே கருச் சேர்ந்து, காட்சியும் ஞான ஒழுக்கங் குணங்களுடைய தன்மை அழியவும் உடனே நிகழ்வதாம் என்க. முன்னர் விட்டுணுமூர்த்தியின் மகளாகத் தோன்றி முருகனைச் சேரவிரும்பித் தவம் புரிந்த பெண்கள் இருவரில் இளையவளாகிய சுந்தரவல்லி யாரறிந்து அக்கடவுளின் கட்டளைப்படி மான்வயிற்றுக் கருவினுட் புகுந்து தோன்றினள். " அந்தண் மாமுனி புதல்வியாய் வேடர் பாலமர்தி" என்ற முருகக் கடவுளின் கட்டளைப்படி காலம் பார்த்திருந்த சுந்தரவல்லி சிவமுனிவரின் காட்சிப் புணர்ச்சியால் பெண் மான் வயிற்றினுள் புகுந்து அவதரித்தாள் என்க. "ஒளிப்பினும் ஊழ்வினை யூட்டாது கழியாது" என்றார் பிறரும்.

நிமித்த காரணனாகிய இறைவன் துணைக் காரணமாகிய சக்தியைக் கொண்டு முதற்காரணமாகிய மாயையில் தூல உடம்பை இருவினைக்கீடாக உண்டாக்கி அந்த உடலில் சூக்குமமான ஆன்மாவைச் சேர்ப்பித்தலாகும் என்பது இதன் குறிப்பாகும் 'முருகப்பிரான் கட்டளைப்படி மானிடப் பிறவியில் வள்ளி அவதரித்தாள்' என்பது எழுவகைப் பிறப்பினுள் மானிடப் பிறப்புச் சிறந்தது என்பதுவும் மாயா புவனங்களிற் போக்கு வரவு செய்து போக நுகர்ச்சியைப் பெற்று அனுபவிக்கும் வினைப்பகுதியினையுடைய ஆன்மா



பலமுறை பிறந்து இறந்து பலபிறவிகளை எடுத்து இறைவன் ஆணையினாற் கன்மத்திற்கேற்க தத்துவங்களினால் தொழிற்பாட்டு இருவினைப் பயனை நுகர்ந்து அரியதவத்தினைச் செய்து அருவினை ஒப்பு அடையவே மலம்பரிபாகப்பட்டு சத்திநிபாதம் என்பவைகளால் வீட்டு நெறியை அடையும் என்பது பொருள். முற்பிறவி உண்டு என்பதினால் மறு பிறவி உண்டு என்பதுவும் ஆன்மா இறைவன் ஆணையினால் தனு கரண புவன போகங்களைப் பெற்று பிறவியை நீக்கும் இதனை.

" இருவினை இன்ப துன்பத் திருவுயிர் பிறந்திறந்து
வருவது போவதாக மன்னி வினைப் பலன்கள் தருமரன்"

என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது.

முருகப்பெருமானின் திருவருட் பேற்றினால் வேல் நம்பிராசன் வள்ளிக்கிழங்கு அகழ்ந்து எடுத்த குழியில் சிறு குழந்தையைக் கண்டு எடுத்து மனைவியிடம் கொடுத்து சுற்றத்தவருடன் தம் மனைக்குக் கொண்டு சென்றான். அந்தக் குழந்தை (மான்மகள்) யின் செயலற்ற நிலை பசியால் அழுதல் பால் குடித்தல் என்பன மானிடச் சட்டைதாங்கிய உயிர்கள் இராசத தாமத சத்துவமாகிய முக்குணவசத்தால் கட்டுண்டு வாழும் குழந்தை பருவம் வரத் தன் தொழிலைத் தோற்றுவித்து நினைவினை உரம் பெறச் செய்தல் வித்தையின் தொழிலாகும். அவ்வித்தையால் மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணமும் தொழிற்பாடெய்தும் இதற்குக் கலையும் துணைக்காரணமாய் வினை செய்தற்கு

87159

நிவிர்த்தி - பிரதிட்டை வித்தை சாந்தி – சாந்தியதீதை ஆகிய கலைகள் ஐந்தின் தொழிற்பாடும் உண்டாம், குழந்தை சிறுகுடியிலுள்ள முற்றத்திலே ஓடி உலாவி சிறுவீடுகட்டிச் சோறு சமைத்து வண்டல் முதலிய விளையாட்டுக்களைச் செய்து வந்தமை பழவினையான நல்வினை தீவினைப்பயன்கள் அனுபவிக்கு மாற்றை உணர்த்துமென்க.

ஆண்டு பன்னிரண்டானதும் தவப்பேற்றினால் அருமையாகக் கிடைத்த வள்ளியை புனம் காக்க வைத்தனர். அது குறவர் குலாசாரமாகும். சீவான்மா பதியுடன் சேருவதற்குரிய பக்குவத்தை யடைதல் என்பது குறிப்பு. பதியை நோக்கி யிடைவிடாது தியானித்துக் கொண்டிருத்தல் இருவினை ஒப்பு எய்திய அன்மா மனம் முதலியதத்துவங்களிலிருந்து வரும் புலனுகர்ச்சியை விடுத்து தவம்புரிதலையுணர்த்தும்.

வள்ளி – தினைப் புனத்திலுள்ள பரண்மீது ஏணியின் படிவழியே ஏறி எத்திசையும் பார்த்து ஆசனத்திலிருந்தாள். இதிலே ஏணிப்படியில் ஏறுதல் என்பது சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு நெறிகளையும் குறிக்கும். இவற்றால் வீட்டு நெறியை யறியமுடியும். ஞானம் முதிர்ந்த பக்குவிகள் எப்பொருளையும் அறியும் சிந்தனையுடையவர்கள். யோகாசனப் பயிற்சியிலும் சிறந்தவர்கள். அவர்களின் மன உள்ளம் உபாதிகள் குறைந்து சிவானந்தம் மேலிடும்.



தினைப்புனத்தில் வள்ளி புள்ளோட்டல் கிளி கடிதல் மணிக்கல் கவணிடுதல் முதலியவற்றைச் செய்துவந்தாள் என்பது, பக்குவான்மா ஆசனமாகிய யோகப் பயிற்சியினாலே பிராணவாயுவை உள்ளடக்கித் தவம்புரியவே, மனம் புத்தி முதலிய கரணங்களின் வயத்தினால் ஆன்மாவைப் புறச்சேட்டைகள் வயப்பட்டு மயங்காதவாறு அந்தக்கரணங்களை பஞ்சாட்சர செபத்தினால் திருவருளிடத்தே செலுத்தும் என்பது உணர்த்தப்படும். திருவருளுடன் ஆன்மா கூடினால் அந்த ஆன்மா மல மாயை கன்மம் நீங்கி வேதனையற்று இருக்கும் இன்பநிலை எய்தும். மலங்களில் நீங்கி அந்தக்கரணங்கள் தூய்மையாதற்குப் பஞ்சாட்சர செபம் இன்றியமையாதது. ''சிவ, சிவ'' என்பது காரண பஞ்சாட்சரம் மனமாசு நீங்கியவர்களால் உபாசிக்கப்படுவது, இதில் சிற் சத்தி சிவத்தில் நடுவே இருக்கும். நடு என்பது உள்ளம் இங்கே சிவத்தின் நடுவே சிற்சத்தி இருக்க மாசு தீர்ந்த பக்குவிகள் உள்ளத்தே சிவசத்தி ஒடுங்கும்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன நடுவுள் இருவீரும் – இருப்பதனால்
அடியேன் உன் – அடியார் நடுவுள இருக்
கும்'' பேறுண்டென்ற மணிவாசகர் வாக்குக கருதப்படத் தக்கது.

குமரக் கடவுள் கந்த வெற்பை நீங்கி தணிகைமலையல் வந்து தங்குதல் சீவான்மாவைப் பதி சேருவதற்கு எதிர்பார்த்தலாகும். அந்த ஆன்மா

சிவமாகிய விளையைப் பெறும்படி தவமாகிய பெரிய வித்துள் முளைத்த பயிரை வளர்ந்திருக்கும் காலத்தே அவ்வான்மாவுக்குத் திருவருள் புரிய அநுக்கிரகித்தாலாகும்.

நாரதமுனிவர் வள்ளியின் அழகுத் தோற்றத்தைக் குமரக் கடவுளுக்கு எடுத்துக் கூறுதல் அகத்தில் - தலைவன் பாங்கனால் தலைவியின் நிலைமையை உணர்த்துதலாகும். இது இறைவன் அருட்சத்தியினால் சீவான்மாவின் பக்குவச் செயலையுணர்த்துவதாகும். நாரதரின் வார்த்தையைக் கேட்டு காம நோய்க் கவலையிலிடையவராய் மையல் மானுட வடிவம் தாங்கினார். இதனை,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த"

எழுந்த தவவடிவமாகும், பதி பக்குவ ஆன்மாவை ஆட்கொள்ளக் குருவடிவங் கொள்ளுதல் சகலருக்கு (மனிதர்) அவர்களைப் போல மானிட வடிவங் கொள்ளுதல் இயல்பு.

நாரத முனிவர் குறிப்பின்படி சுப்பிரமணியக்கடவுள் தினைப்புனஞ் சென்றார். அங்கு பண்டு ஒரு புடையில் வைத்த பழம் பொருள் கிடைத்த தன்மை போல வள்ளியைக் கண்டனன். எத்திசையும் பார்க்கக் கூடிய தினைக்கொல்லைப் பந்தலில் வள்ளி இருந்தனள். அவளும் அவரைக் கண்டனன் என்பது கூறாதே அமையும். ஈண்டு காந்தருவக் காட்சி நடைபெற்றது. அது முன்செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும்



அடுப்பாருமின்றி இருவரும் ஒரு இடத்தில் சேருதல் என்க. இது பதி சீடனாகிய பக்குவ ஆன்மாவுக்குக் காட்சி கொடுத்தலையுணர்த்தும், பக்குவான்மாவைப் பதி வலிந்து ஆட்கொள்ளுதல் மார்ச்சால சம்பந்தமாகும். பக்குவான்மாவின் அன்பு காரணமாக ஆடல்கள் நிகழ்கின்றன. அவை சத்தியின் தொழிலாகும். ஆதலின் நமது சக்தி அறுமுகன் என்றவாறு உணர்க.

வள்ளியுடன் இச்சையாகிய மாகத்தை வெளிப்படுத்த வேட்டுவ தினைப்புளம் வந்தார் அறுமுகன். இது இறைவன் சீவான்மாவுக்கு நற்போதனை மெய்யுணர்வு வர எத்தனிக்க அதற்குமாறாக மனம், புத்தி சித்தம் என்னும் கரணங்கள் சேட்டை செய்தலை உணர்த்தும்.

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகும் தருணத்தில்
சுற்றமென்னும் தொல் பசுக் குழாங்கள் பற்றியலைத்தல்"

என்பதாலும் தெளிவு பெறும்.

வேட்டுவரைக் கண்டதும் அறுமுகப் பெருமான் வேங்கைமர வடிவமாகத். தோன்றினார். இது பக்குவ ஆன்மாவுக்குப் பாச ஞானம் இவை என்பதை உணர்த்துதலாகும். பாசம் என்பது உடலுடன் கூடிய தத்துவங்களினால் எனது என்னும் பொருள் உணர்வு என்க. வேங்கைமரம் குறிஞ்சி நிலக்கருப் பொருள். வேங்கை மாயையின் தன்மையை விளக்கவே கூறியதுமுணர்க. ஆன்மா மாயாகாரியமாகிய தத்துவங்களினாற் தொழிற்பட்டு இருவினை ஒப்புநிலை எய்தினாலும் மாயா சம்பந்தமுண்டு. மாயையாகிய உடலிலுள்ளது ஆன்மா.

'மாயா இயந்திர தனுவுளது ஆன்மா' — சிவ ஞான போதம் குறிஞ்சிக்கு வேங்கை-கரு. அது உரியான சீவனுக்கும் பதியான முருகனுக்கும் என்றும் உபகாரமானது. 'மாயை கொடு மலம் அழிப்போன்' என்பதனுலும் உணரலாம், ஆனல் மாயை இருவினை ஒபபு மலபரிபாகம் வந்த ஆன்மாவை மீண்டும் மீண்டும் தொடரும் என்பது பொருந்தாது. அதுசடம். ஆதலால் பற்ருது — ஆகவே உடலோடு உயிர் இருக்கும்வரை மாயை சம்பந்தத்துடனே பக்குவ ஆன்மாவும் இருக்கும் என்பதாம். மாயை அருவாய் ஒன்ருய் வித்தாய் சடமாய் வியாபகமாய் முதலவன் வியாபகத்துள் அடங்குவது என்க. மாயையைப் போல வேங்கையும் வெட்ட வெட்டத் தழையும் என்பதாம்.

முருகன் வேங்கை மரவடிவமானதை வேட்டுவராசன் கண்டு ஆச்சரியப்பட்டு அதனைத் தறிக்க எண்ணியதும் தறிக்கவிடாது தடுத்துச் சுற்றத் தவருடன் சிறுகுடி சேர்ந்தான் என்பது சீவாணமா பாசஞானம் இவைதானென்று உணர்ந்தவழி மலவாசனை வசத்தால் முக்குண தத்துவ பேதங்கள் சீவான்மாவைப் பற்றிச் சேட்டை புரிதலை உணர்த்தும். ஆணவமல முனைப்பால் உயிர் இயக்க உணர்வு மின்றியிருக்கும் நிலை தாமத குணமென்றும், அது இறைவனருளால் உந்தப் பட்டு ஆணவத் தன்மையினின்று நீங்கி நிற்பது இராசத குணம் என்றும் ஆணவமின்றி அருள் வயமான நிலை சத்துவ குணமென்றும் பகுத்துணர்க, இராசத தாமத நிலைகள் 'உயிர் ஆணவ



மலப்பட்ட அசுத்த தூலகுண நிலைகள். சத்துவ குணம் மிகுந்ததும் தூய சூக்கும தத்துவமாகும் என்க.

'கோங்கென வளர் முலைக்குறவர் பாவையே நீங்கலன் நீங்கலன் நின்னை என்றுமே' நின்னை என்றும் நீங்கலன் என்பது இறைவன் ஆன்மாவுக்கு தமது பூரண நிலையை உணர்த்தியது என்க, இறைவன் ஒரு கணப் பொழுதாயினும் பிரியில் உலகத்துயிர்கள் தரித்திருக்க மாட்டாதென்பதாகும். வள்ளியும் குமரக்கடவுளை விட்டுப் பிரியமாட்டாள். குமரனுக்கும் வள்ளியின்றிப் புக விடமில்லை. ஊனுகி உயிராகி அந்தரான்மாவாயிருக்கும் கடவுளுக்கு வள்ளியின் திருவடியே துணையாயிற்று என்க. குறவர் பாவையே என்று வள்ளியை விளித்துக் கூறியதினுல் பரஞான அபர ஞானங்களையுடைய பக்குவான்மாவாக உணர்தற்குரியது.

வள்ளியை நோக்கி நான் நீயாக இருத்தலன்றி உன்னை நான் பிரியமாட்டேன் என்று இரங்குவதும் ஆன்மாவின் மீதுள்ள திருவருளினுல் இச்சையை விருத்தி செய்வது என்க.

''பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதி மோக தயாபரனே'' - அனுபூதி உலகப் பொருளை நுகர இச்சை வேண்டும். தத்துவங்களை இச்சையாற்ருன் நுகரமுடியும். அதற்காகத்தான் இச்சையாகிய வள்ளியை முருகன் பணிகின்ருர் என்க. திருவருட் சக்தி ஆணவ மலத்தினுல்

மறைக்கப்பட்ட ஆன்மாவினது தத்துவங்களினால் விளங்கும் ஏக தேச அறிவைப் போக்கி தனதுபகாரத்தினால் இச்சா ஞானக் கிரியைகளை விளக்கித் தன் வியாபகத்துடைக்கி தான் விளக்கமேயாயிருக்கும்.

'அவனன்றி ஓரணுவும் அசையாது'
'பதி இன்றிப் பசு இயங்கமாட்டாது'
'நானின்றி நீ வாழமாட்டாய்' என்பதுவுமது.

இறைவன் ஆன்ம நிலையில் ஆன்மமயம். ஐம்புல வேடரின் வயப்பட்ட வள்ளியைப் பார்த்து உயிரின் அறிவைப் பறித்துக் கொண்டு உடம்பு பிரியுமாயின் உயிர் நிலை என்னாகும். அதுபோல உன் நிலையுமாம் என்று வள்ளிக்கு உணர வைத்தான்.

ஆன்மாவின் பக்தி வெள்ளத்தில் அகப்பட்ட முருகன் உன்னையன்றி உய்திறம் எனக்கு வேறுண்டோ என்று இரந்து நின்றவழியும் உரையாடல் நிகழவில்லை. என்னைப் பேணிக் காத்தலே முறைமையும் உயர்திறமுமாகும் என்ற கூற்று — பெத்த நிலையில் மலநீக்கம் வரும் வரையும் என்னைப் புறக்கணித்தனை என்பது குறிப்பு. உன்மனதில் என்னைத் தியானி என்பதும் ஆன்மாவைத் திருவருள் நோக்கடையச் செய்வதும் ஆகிய பெருங் கருணைத் திறனேயாகும்.

நீர் விருப்புடன் அணியும் சந்தனம் மலர் என்பவைகளாய் யானிருக்கவில்லை. அதனால் வாடினேன். இனி என் செய்வது என்பதன் குறிப்புப் பொருள் தத்துவங்களினால் வயப்பட்ட சீவான்



மாவே நீர் அழிதன் மாலையவாகிய இச்சைப் பொருள்களை விரும்புகின்றனை யான் அப் பொருள்களாயிருக்கவில்லை, யான் நிலை பெற்ற அழியாத் தன்மையுடையேன். அவற்றிற் கொண்டபற்றை நீக்கி என்னை அடைகுதி. நீர் என்னை அடையும் வரையும் யான் அருள் வெள்ளத்தில் ஆடுவேன் என்றார் என்க.

தேவலோகப் பெண்கள் யாவரும் வாழ்த்தும்படி நித்திய செல்வத்தைத் தருவேன், எம்முடன் வருதியென்று முருகன் கேட்டருளினார் என்பதன் குறிப்பு சாத்துவீக குணமுடைய பக்குவ ஆன்மாவே நீர் தவம் புரிதலை விட்டு எம்முடன் வருதியேல் பிறப்பு இறப்பு இல்லாத புவனத் தோற்றத்திற்கு மாயை காரணமாய் அழிவின்றி நிற்கும் சுத்த புவனத்திலிருக்கும் சிவசத்தி பெற்ற யாவரும் உம்மை வணங்கும் நிரதிசய இன்பத்தை தந்தருளுவேன் என்க.

முருகன் சிந்தையின் கருத்தினை அறிந்த வள்ளி உற்று நோக்கி முழுதுவகுக்கும் முதல்வரின் பெருமையையும் தமது தாழ்வு நிலைமையையும் எண்ணி, தாம் அவர்க்குரியரெனவும் எண்ணி நாணினாள். இது பக்குவ ஆன்மா பதியில் உண்மை நிலையினை உணர்தலைக் குறிக்கும். எல்லாவுலகும் தானாயிருக்கும் கருத்தாவாதலினாற் போலும் முழுதுலகருள் புரிமுதல்வர் என்றாள். யான் சிறியேன், தேவரீர் தத்துவங்களுக்கும் அடியேனுக்கும் தலைவர் அங்ஙனம் தலைவராயிருக்கின்ற நீர் இரண்டறக்

கலத்தலாகிய பேரின்பத்தைத் தருதற்குச் சிறியேனை இரந்து நிற்பது நீதியன்றெனக் கூறி இரங்கினாள் என்க.

தேவரீர், கலவியை விரும்புவது கடமையன்று. "புலி பசித்தாலும் புல்லைத்தின்னுமோ" என்று உவமை கூறிய வள்ளி பின்னரும் மலபரிபாகம் எய்துவித்து கலந்திருக்கும் வன்மையுடையீர் அதனை நீக்காது எம்முடன் கலந்திருந்தால் இழிவு என்று உணர்த்தினாள். வள்ளி உரையாடிக் கொண்டு இருக்கும் போது நம்பிராசன் பரிவாரம் சூழ உடுக்கை முதலிய ஒலியுடன் மீண்டும் வந்தான். தந்தை வருவதைக் கண்டு அஞ்சி, நீங்கள் இவ்விடத்தை விட்டு ஓடிப் போங்கள் என்றாள். அவள்மீது பூண்ட அன்பை நிலைபெறச் செய்ய எண்ணி முருகன் விருத்த தவவேடம் கொண்டார். இது பக்குவ ஆன்மாவுக்கு மெய்யுணர்வூட்டும் உபதேசம் நிகழ்வுழி வாசனாவசத்தால் குணதத்துவங்கள் ஆன்மாவுக்குச் சேட்டை செய்தல். வேடர் வருகையும் அந்த மாயாதத்துவங்கள் தன்னை வசப்படுத்தி வருத்துவது போல முருகனையும் வருத்துமென்று பெண்மையுணர்வால் எண்ணி வருந்துதலும் குறிப்பாம்.

முருகன் விருத்தவடிவம் கொண்டு தமக்குச் சமீபத்தில் வருகின்ற வேடுவரிடம் சென்று திருநீறு கொடுத்து தமது எண்ணத்தைத் தெரிவித்தான். வேடர்பூர்வசன்ம தவ விசேடத்தினால் கடவுளைப் பேறும் பண்புடையவராதலின் அதற்குச் சம்மதித்தனர், வேட்டுவரின் கோபம் தணியுமாறு குறிஞ்சிக்



குமரன் அவர்களுக்குக் குருவுமானார். முருகன் வேடுவருக்கு உரிமையுடையவன், நம்பிராசன் தன்னிலை மயங்கி வசப்பட்டு உணவு கொடுத்து தனது மகளைத் துணைவைத்துச் சென்றான். அடியார்க்கு எதுவும் நன்மையாகும்.

ஆன்மா அறிவு இச்சை செயல்களை விளக்கும் தத்துவங்களினால் மயக்கமுறும் துணைக்கருவியாகிய மாயை பேரறிவினைப் பயப்பிக்கும். குணதத்துவம் சடப்பொருளாதலின் ஆன்மாவுக்குத் துன்பம் செய்யாமலிருக்க வசியமாக்குதல் பதியின் தொழில்.

வள்ளியிடம் சோதனை முடிய விருத்த தவசிக்குப் பசி உண்டாயிற்று. உணவு உண்டார். நீர் வேட்கை மிகுந்தது. இது ஆன்மாவின் போதத்தை நுகரும் பசிதாகமாகும். அதாவது திருவருளைக் கூட்டுதலாகிய தாகமுடையேன் என்று கூறியதுமென்க. அதனைக் கேட்ட வள்ளி இங்குள்ள ஆறு மலைகளைத் தாண்டிச் சென்றால் ஏழாவது மலையில் சுனை இருக்கிறது, அங்கே சென்று தண்ணீர் பருக வாருங்கள் என்று அவர் கையைப் பிடித்து அழைத்துச் சென்று பருகச் செய்தாள் என்பதன் குறிப்பு: சிவயோகம் என்பது ஆதார மூர்த்திகளைத் தியானிக்க பிரமமந்திரம் முத்தி கபாடம் திறக்கும் இதனால் நாதாந்தத்தின் எய்தி பதியுடன் கலந்திருத்தல். யோகிகள் ஆறு ஆதாரங்களையும் தாண்டி ஏழாவது இடத்தில் (அமிருதப் பொழில்) பதிக்குத் தம்மை அர்ப்பணிப்பர், மந்திரம், பதம் வன்னம், புவனம், தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களையும் கடந்து ஆன்மா சிவத்தை அணைதலுமாம்.

" ஆறத்துவாவும் அண்டத்தார்ந்த அத்துவாக்களையும்
கூறத்தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து" — என்பது
(கந்தர்கலி வெண்பா)

வித்தியாதத்துவம் ஏழையும் கடந்த ஆன்மா திருவருளைப் பெற்று மலமாயை கன்மம் நீங்கிப் பதியைப் பொருந்தும் பக்குவி ஆகும். அது ஆன்மா இன்பம் அடையும் பக்குவ நிலையாம். (அதீதநிலை)

முருகன் பெண்ணமுதே! தாகத்தைத் தணியச்செய்தது போலவே மோகத்தையும் தணியச் செய்வாய் என்றார். இது ஆட்கொள்ளப்பட வேண்டிய மோகம். இறைவன் ஆன்மாவின்மீது கொண்ட அருளின் பெருங்கருணையைக் காட்டுகின்றது. முருகன் இரங்கிக் கும்பிட்டதும் பெரியவரே தவவேடம் கொண்ட உமக்கு இவ்வெண்ணந் தகுதியோ? இந்த தவசி வேடத்தை மாற்றுது என்னை என்பது. குரு சீடனுக்குத் தீட்சை புரிந்து தன் போலாக்கி உபசாரங்கள் செய்து வணங்குதல் மரபாதலினாலே அதுபோல வள்ளியை முருகன் வணங்கினான் என்க. தவசி வேடம் பாலுக்குள் நஞ்சுகலந்ததன் மைத்து ஏனெனில் நஞ்சு சுரந்தபால் பருகுபவரது உயிரைக் கொன்றுவிடும். அதுபோன்றது தவசியாகிய முருகனது இயற்கையும் என்க. முருகன் கைதொழுது நிற்கும்நிலை தீதாய் முடியும் என்பது குறிப்பு. அது இருவருக்கும் தீதாய் முடியும் எனலாம். தத்துவ வயப்பட்ட எமக்குப் பக்குவநிலையைத் தருகின்ற இந்தநேரத்தில் வாசனாவயத்தால் தத்துவங்கள் எழுந்து வருத்த முனைகின்றதே என இரங்கினாள்.



வள்ளி முதியவருக்குத் துணையாக இருக்கலாகாதென்று எண்ணி தினைப்புனங் காக்கப் புறப்பட்டாள், அப்பொழுது நீர் நடந்தருளும் நான் முந்திப் போவேன் என்பது பிரியலாகாத ஓர் நிலைவந்தும் வாசனா மலத்தாக்கத்தால் பிரிவு வந்தது என்க. இது இறைவன் ஆன்மாவின் நிலையையுணரும் வேளையில் வாசனாமல முனைப்பு ஆகும்.

வாசனாமல முனைப்பு அடங்காது செல்லும் வள்ளிக்கு முன்னே எழுந்தருளி வழி காட்டியருள்வீரென்று விநாயகக் கடவுளை முருகன் தியானஞ் செய்தார். விநாயகர் உலகம் நடுங்க மறிகடலே போலமுழங்கி வரவும் வள்ளி விருத்த தவசியைத் தழுவிக் கொண்டாள் ஓங்காரமாகிய விநாயக யானை தோன்றியவுடன் ஆங்காரம் நசிந்து சரண்புகுந்தது. ஆன்மா பதியைச் சரண்புகுந்தது என்பது குறிப்பு. விநாயகர் குடிலை பிரணவ நாதம்—யானையின் பிளிற்றொலி,- அந்தத்தீட்சை வாசகதீட்சையாகும், முன்னே நயனதீட்சை பெற்ற வள்ளி இப்போது வாசகதீட்சையும் பெற்றாள் பெற வேமானசம், சாஸ்திரம், யோகம், ஔத்திரியாகிய ஏழ்வகைத் தீட்சைகளையும் பெற்று குகனைப் பற்றியவள்ளி குகமயமானாள். நம்பியாண்டார் நம்பி பெற்ற வாசகதீட்சை ஏழு தீட்சைகளையும் அடைவித்து அவரை முழுதுணர்பதிநிலைக்கு உயர்த்தியது. குமர குருபரனுக்கு செவியில் திருச் செந்தூர் முருகன் உணர்த்திய ஓங்காரம் ஞானநடம் தந்ததும் சூரபதுமன் கொண்ட மாயவடிவம் ஓங்காரத்தால்

அழிந்ததும் ஆகியவை சிவானந்தத்துக்கு பிரண வமே துணை என்பதாம் வள்ளி பிரணவப் பொருளை உணர்ந்துவிட்டாள், முன்னர் தந்தைக்குபதேசம் செய்தவரும் இவரே.

'' அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை — இபமாகி
அக்குறமகளுடனச் சிறு முருகனை
அக்கண மணமருள் — பெருமாளே.'

என்கின்றார் அருணகிரிநாதர்.

முருகன் தமது தொல்லுருவம் காட்டினார். குகனைக்கண்டவுடன் வாசனாமல முனைப்பு நீங்கி ஆனந்தப் பெருநிலை பெருகியது.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பர் மணிவாசகர். ஞானதீட்சையாகியதும் வள்ளி உரையாடினாள். பக்குவ ஆன்மாவின் மனதில் பதிக்கன்றி வேறு எவர்க்கும் இடமில்லை என்பதை உலகினர்க்கு உணர்த்தவே பல்வேறு வடிவங்களில் வந்தோம் என்றார் என்க. பிரணவம் பசுஞான பாசஞானங்களை நீக்கவே வள்ளி பதிஞானம் பெறவே ஊனக்கண் நோக்கு அழிந்தது. ஞானக் கண்ணின் சிந்தையின் நாடி நின்றவள்ளிக்கு முருகன் திருப் பெருவடிவம் முழுதும் அவனருளே கண்ணாகக் காண நேர்ந்தது இங்குகருதத்தக்கது.

வள்ளி நீர் உங்கள் தினைக்காவலுக்குப் போவ தற்கு எனக்கு முன்பாக எழுதி என்றார் என்பது இன்னும் பக்குவ ஆன்மா உலக வாழ்க்கையைப் பற்றுகின்ற தென்பதை உணர்த்தும் தோழி தலைவி.



யின் அவயவ வேறுபாட்டைக் கண்டறிந்தாள் நாற் றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி செய்வினை மறுப்பு, செயல் பயில்வு என்ற எழுதிறத்தாலும் ஆராய்ந்து துணிதல் என்க, இது இறைவன் ஆன்மாவுக்கு நற்போதனைகளை உணர்த்த பழமை மாறித் தோன்றியவற்றை அருட்சத்தியினால் அறிதல் என்க.

தலைவியும் தோழியும் தங்கியிருக்கும் போது குருபரன் வந்து குறையிரத்தல் பாங்கிமதியுடன் பாட்டிற்கேற்ற செவ்வியை அறிந்து சேரல் பக்குவ ஆன்மாதிருவருளுடன் கூடி நிற்ப பதி காலமறிந்து வினையியமை, ஆன்மா தத்துவங்களில் மீட்டும் வசப்படாமல் தம்மையடையும்படி அருள்சத்திக்கு அதிட்டித்து நிற்றல் பதிக்கு ஆன்மாவையும் அருளையும் விட வேறோர் பற்றுமில்லை. ஆன்மா விரும்பியபடி பதி அநுக்கிரகிப்பார் 'கொண்ட படியே கொண்டிரு' என்ற திருவருட்பயனில் இறைவன் எந்த நெறியில் ஆட்கொள்ள வந்தாரோ அந்த நெறியில் ஆன்மா ஆட்கொள்ளப் படும். அதற்கு உபசாரமாகச் சிற்சக்தி பக்குவ ஆன்மாவை அதிட்டித்து நின்று சேர்ப்பிக்கும். சிற்சக்திதானும் ''எத்திறம் நின்றான் ஈசன் அத் திறம் அவளும் நிற்பாள்'' என்ற சாத்திர வாக் கிற்கமைய அருள் செய்யும் என்பது.

காதல் கைமிக்க தலைவன் தலைவியின் படத் தை எழுதி மடல் மா ஏறுதல் மரபு. மடல் ஏறுதல் என்பது பனைமட்டையிற் செய்த குதிரை யில் தலைவியின் படத்தைவைத்து தாம் ஏறி

யிருந்து வீதியில் இழுத்துச் செல்லுதலாம். அதற்கு அஞ்சித் தோழி மடல் மா ஏற்றை விலக்கி குறை நேர்ந்து அறத்தொடு நிற்றல் இறைவன் ஆன்மாவை ஆட்கொள்ளுவதற்கு சத்தியை நெறிப்படுத்துதல் என்பது குறிப்பு.

வள்ளி தினைப்புலத்தை விட்டு வீடு செல்லும் போது குறிஞ்சிநிலக் கருப் பொருள்களுக்குத் தூது விடுத்துக்கொண்டே போனாள். இறைவன் மானிட வடிவுடன் வந்தமை, தம்மீது இரங்கி அருள் புரிவதற்கே போலும் என்று நினைத்தாள். பக்குவ ஆன்மா குரு உபதேசத்தால் ஆணவ மலநீக்கம் குறைந்து சிவத்தியான மாயவழி தவஞ் செய்தலை ஒழிதல் என்பது குறிப்பு.

"ஒண்பொருள் கண்ணுற்றார்க்கு உறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப்பொருள் போற்காண்" என்பது
திருவருட்பயன்.

வள்ளி இற்செறிக்கப்பட்டமையால் நாயகிக்கு நாயகனைப் பிரிந்திருக்கமுடியாத நிலையுண்டானது. தலைவி அவசரமுற்றதைக் கண்ட தோழிகள் எடுத்து தழுவி நற்றாய்க்கு உணர்த்தியும் ஆவனபுரிய குறிஞ்சிக் குமரனுக்கு வெறியாட்டு நிகழ்வித்தனர். வெறியாட்டாளன் ஆவேசங் கொண்டு தம்மை மகிழும்படி சிறப்புச் செய்யின் குறைநீங்குமென்றனன். திருவடி ஞானமே உண்மையை அறிய முடியும் என்பது குறிப்பு. இறைவன் திருவடிக்கீழ் அடங்கியிருக்கும் உயிர் வாயிலாக நிகழ்வன இறைவன் செயலாகும். இது பேயொன்றுந் தன்மையென்பர்.



"பேயொன்றுந் தன்மை பிறக்குமளவுமே
நீயொன்றுஞ் செய்யாமை நில்" என்ற திருவருட்பயன் இந்த மெய்ப்பாட்டு நிலையையுணர்த்துகிறது. கண்டவரெல்லாம் முருகு அணங்கு (பேய்) பிடித்ததென்று சொல்லி இல்லிலுள்ளார். வெறியாட்டெடுப்பு. வள்ளி முருகன் குறிக்கோளொன்றன்றி வேறொரு சிந்தையுமின்றி பேயென்று சொல்லிக் கழிப்புக் கழிக்க வெறியாட்டெடுத்தார். அறியாதபடி குறவர்கள் என்பது குறிப்பு. அவள் உள்ளக் குறிப்பு வள்ளலுக்குத்தான் தெரியும்.

"பெண்டிர் பிடிபோல ஆண் மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டாரென்றுந்தீபற" - என்பது திருவுந்தி.

முருகன் வள்ளியைப் புனத்திலே காணாது தேடித் திரிதல் என்பது, இறைவன் செய்யும் ஒவ்வொரு செயலும் உலக வாழ்வுக்கு உபகாரமாகும் பொருட்டுச் செய்துகாட்டும் நாடகக் காட்சி போன்றது. ஞானப்பக்குவமுள்ள வள்ளியை புனத்திலே வந்து காணாது தேடியமை அருள் நிறைந்த இறைவன் அவள் மீது கொண்ட பெருங் கருணையேயாகும். வள்ளியின் சாயலுக்கு இணையாகக்கருதிய உவமப் பொருள்கள் திருவருளுக்குப் பாத்திரமானவை. இதனைத் திருப்பெருந்துறையில் பரமாசாரியரின் திருவருளுக்கு அங்குள்ள அசேதனப்பொருள்களும் உரிமையானது என்பதாலுமுணரலாம்.

குறிஞ்சிக்குமரன் அந்நில வேட்டுவருக்குத் திருவருள் புரியும் நிமித்தம் சிரமம் அடைவார் போல் வேட்டுவர் வாழும் சிற்றூர் புக்கு புறம்

போய் நின்றார். வேட்டுவர்மீது கொண்ட கருணை
யும் வேடர் பூர்வபுண்ணியத்திற் செய்த பயனு
மாகும். இதனை அறியாதவர் யாமத்தில் அற்பகாரி
யத்துக்காக சென்றான் முருகன் இது தகுமா?
என்று கூறுவாருமுளர். முருகன் அர்த்தயாமத்தில்
வள்ளியைத் தேடிச் சிறுகுடில் சென்றமை இறைவன்
பக்குவ ஆன்மாவுக்கு மட்டுமன்றி மற்றியாவர்
கண்ணுக்கும் புலனாகமாட்டார் என்பது திரு
வருளின் வசப்பட்டு ஞான நடனம் பெறும்வரை
ஆன்மா ஊன நடனத்தில் மாயையில் கட்டுண்
டிருக்குமென்பதும் ஞானசக்தியான வேல் கைக்
கொண்டு சென்றது. இருள் யாமத்தில் ஒளி அந்த
ஞானசக்தியாலேதான் உண்டாக ஆன்மா இருள்
(மலம்) நீங்கிச் சிவமயமாகும் என்பதுவும் குறிப்
பாம்.

"மேயநல்லுயிர்கள் எல்லாம் விழித்துயில் பயிலுங்காலை
தூய தொண்டர்க்கு மாயை தொலையு நல்யாமந் தோன்ற"

என்பதினாலும் வள்ளிக்கு மாயை நீங்கும் காலம்
அந்நேரமாதலின் பாங்கி கதவை நீக்கி தலைவியை
கொண்டு சென்று முருகனிடம் ஒப்படைத்தார்.
இது அஞ்ஞானத்தை அகற்றி பக்குவ ஆன்மாவை
திருவருட்சக்தி இறைவனிடம் சேர்த்தது ஆகும்.
யாமப்பொழுது உலகாரியம் ஒழிந்து வேறொன்றி
லும் மனஞ்செல்லாது துயிலும் நேரமாகும் இது.
சகல புவன கோடிகளும் பிரபஞ்ச ஞானமொழிந்து
சுழுத்தி நிலையை அடைந்தன என்பது குறிப்பு.
'எஞ்சலில் சிறூர்' என்பது சிறுகுடியிற்
வசித்த வேடுவரும் அரசனும் முற்பிறவியில் மோட்
சத்தைப் பெறுவதற்கேது வானதப்பலன் கிடைத்



தது. வள்ளியும் புத்திரியாகப் பிறந்தமையும்
திருவருட் பேறும் முன்னர் கண்ணுவ முனி
வரின் சாபத்தினால் விஷ்ணு – உபேந்திரன் – இலக்
குமி முறையே இப்பிறவியில் சிவ முனிவராகவும்
நம்பிராசனாகவும், மானாகவும், தோன்றினர்
என்பது வரலாறு.

வள்ளி முருகனின் திருவடிகளை வணங்கிப்
பணிந்து புலம்பியே புகலல் உற்றார் என்பது, அடி
யார்களுக்கு துன்பம் வந்தால் இறைவன் சந்நி
தியை அடைந்து வணங்கி. மனமிரங்கித் துதிகளைக்
மெய்யன்போடு தன்னைமறந்து துதித்து தமது
துன்பங்களை தெரிவித்தவரின் காலம்பார்த்து அவர்
திருவருள் செய்து அவர்களுக்கு வந்த இடையூறு
களை நீக்கியருளுவதோடு சுகவாழ்வுதந்தருளுவார்
என்று உணரப்படும்.

முருகன் வள்ளி நாயகியாருடன் சிற்றூரைத்
தாண்டி பூங்காவிற் சென்று தங்கினார். அப்போது
வேட்டுவர் பலர் முருகனைச் சூழ்ந்துவர அவள் அஞ்
சினாள். .போர்தொடங்கியதும் வேடரின் பாண
மழை மலர் மழையாயின. சேவற்கொடி எழுந்து
கொக்கரித்தது. அந்த ஒலியிலே வேட்டுவர் இறந்
தனர். பிரணவநாதம் பிறந்ததும் புலன்கள் ஓயத்
தான் வேண்டும். தந்தை சுற்றத்தவர் இறந்த
மையைக் கண்ட வள்ளி பதைபதைத்துக் கூறினாள்
என்பது, அடியவர்களும் இறைவனும் உலகத்தவர்
களுக்குப் பல வடிவங்களை எடுத்து வந்து தோன்றி
பாமரமக்களுக்கு பல திருவிளையாடலைச் செய்து
அடிமை கொள்ளும் தன்மையாகும்.

குறிஞ்சிக்குமரன் சிற்றூர்க் காவலைக் கடந்து வள்ளியைக் களவாடி குலத்துக்கு வசையை உண்டாக்கி வேட்டுவருடன் போர்செய்து தாய்பிள்ளையைவிட பூட்டிக்கொன்றதுபோல இறந்த வேட்டுவரை ஒரு சஞ்சீவியால் துயில் எழுப்பி அருள் செய்தார் என்பது போர்செய்தல் தத்துவங்களின் இறுதிக்காலச் செயலாகும். ஆன்மாவுக்குத் துன்பம் செய்த வினையாவும் ஞானசத்தியால் ஒழியற்பாலன, மாயேயமலமும் கிரியாசத்தியால் ஒழியற்பாலன. இக்கிரியாசத்தியினாலே ஆன்மாவின் சீவகரணங்கள் சிவகரணங்களாகி விடுகின்றன.

உலகம் உய்ய லீலைகளை எல்லாம் நிறைவு செய்துவிட்ட குகப் பெருமான் உயிர் பெற்றெழுந்த நம்பிராசனுக்கு ஆறுதிருமுகங்களும் பன்னிருதடந் தோள்களும் கொண்டு காட்சியளித்தான். நம்பிராசன் அவரது திருவடிகளிற் பணிந்து எழுந்தான். தேவ! தேவ! எம் சிற்றூர்க்கு வந்து எம்புதல்வியை மணஞ்செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

நம்பியின் விருப்புக்கிரங்கிய குகப்பெருமான் வள்ளி நாயகியாருடனும் நாரதருடனும் சிற்றூருக்கு வந்தருளினார். நம்பிராசன் வரவேற்று உபசாரங்கள் செய்து ஆசனத்தில் முருகனையும் வள்ளியையும் அமரச் செய்தான். முருகன் அம்மையாருக்குத்திருவருள் நோக்கம் செய்தான். அம்மையாரும் பழைய மானிட வடிவம் நீங்கி ஆதி இச்சாசத்தி வடிவம் கொண்டாள். சுப முகூர்த்தத்

97159



தில் நம்பி வள்ளியம்மையின் திருக்கரத்தை முருகன் திருக்கரத்தில் நம்பி வைத்து எமது புதல்வியை உங்களுக்குத் தாராதத்தஞ் செய்து தந்தேன் என்று நீர் வார்த்துக் கொடுத்தான் நாரதர் திருமண விதிமுறைகளைச் செய்து முடித்தார்.

இது பக்குவ ஆன்மாவுக்கு எடுத்த பிறவியிலே மலமாயை கன்மங்களை நீக்கி பாலுடன் சேர்ந்தநீர் பாலாகுந்தன்மை போல இரண்டறக் கலத்தல் என்பது குறிப்பாம். ஆன்மாவும் இறைவனும் வேற்றுமையின்றிப் புணர்ந்து நிற்கும் மெய்ப்புணர்ப்பு நிலையில் ஆருயிர்களை அடிமை என்று கொண்ட தன்மையால் தான் அதுவாய் நின்று திருவடிப் பேரின்பம் துய்த்துக் கொண்டிருக்கும். சைவசித்தாந்தச் செல்வர் திருவருளால் முப்பொருளுண்மை தேர்ந்து சிலம் முதலிய நற்றவத்தின்வழி நின்று பஞ்சாட்சரம் முறையாக ஓதி உணர்ந்து இறைவன் திருவடிக் கீழ்த் தலைமறைவாய்த் தாடலை போற்புணர்ந்து மீளா ஆளாய்ப் பேரின்பம் அனுபவிக்கும் பேற்றினர் என்க. இறைவன் திருவருள் துணையால் உணர்ந்து அடிமையாம் ஆருயிருக்கு பேரின்பத்தை ஊட்டியருளும் இன்பவடிவினர்என்க. சித்தமலமறுவித்துச் சிவமாக்கி ஆண்டருளும் கருணையும் உடையவர் ஆவர் என்பதாம்.

திருச்சிற்றம்பலம்

சுவர்ணா அச்சகம், யாழ்ப்பாணம்.